ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வண்டுணும் ॥

*This document*[*] *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

[*] This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வண்டுணும் ॥

## திருவிண்ணகர் - 1

‡வண்டுணு நறு மலர் இண்டை கொண்டு⋆
பண்டை நம் வினை கெட என்று⋆ அடிமேல்
தொண்டரும் அமரரும் பணிய நின்று⋆ அங்-
கண்டமொடகல் இடம் அளந்தவனே!⋆
ஆண்டாய் உனைக் காண்பதோர்⋆
அருள் எனக்கருளுதியேல்⋆
வேண்டேன் மனைவாழ்க்கையை⋆
விண்ணகர் மேயவனே⋆ (1)

அண்ணல் செய்தலை கடல் கடைந்து⋆ அதனுள்
கண்ணுதல் நஞ்சுண்ணக் கண்டவனே!⋆
விண்ணவர் அமுதுண அமுதில் வரும்⋆
பெண்ணமுதுண்ட எம் பெருமானே!⋆
ஆண்டாய்! உனைக் காண்பதோர்⋆
அருள் எனக்கருளுதியேல்⋆
வேண்டேன் மனைவாழ்க்கையை⋆
விண்ணகர் மேயவனே (2)

குழல் நிற வண்ண! நின் கூறு கொண்ட⋆
தழல் நிற வண்ணன் நண்ணார் நகரம்
விழ⋆ நனி மலை சிலை வளைவுசெய்து⋆ அங்-
கழல் நிற அம்பதுவானவனே!⋆
ஆண்டாய்! உனைக் காண்பதோர்⋆
அருள் எனக்கருளுதியேல்⋆
வேண்டேன் மனைவாழ்க்கையை⋆
விண்ணகர் மேயவனே (3)

www.prapatti.com

நிலவொடு வெயில் நிலவிரு சுடரும்⋆
உலகமும் உயிர்களும் உண்டொருகால்⋆
கலை தரு குழவியின் உருவினையாய்⋆
அலை கடல் ஆலிலை வளர்ந்தவனே!⋆
ஆண்டாய்! உனைக் காண்பதோர்⋆
அருள் எனக்கருளுதியேல்⋆
வேண்டேன் மனைவாழ்க்கையை⋆
விண்ணகர் மேயவனே (4)

பாரெழு கடல் எழு மலையெழும் ஆய்ச்⋆
சீர் கெழும் இவ்வுலகேழும் எல்லாம்⋆
ஆர் கெழு வயிற்றினில் அடக்கி நின்று⋆ அங்-
கோர் எழுத்தோர் உருவானவனே!⋆
ஆண்டாய்! உனைக் காண்பதோர்⋆
அருள் எனக்கருளுதியேல்⋆
வேண்டேன் மனைவாழ்க்கையை⋆
விண்ணகர் மேயவனே (5)

கார் கெழு கடல்களும் மலைகளுமாய்⋆
ஏர் கெழும் உலகமும் ஆகி⋆
முதலார்களும் அறிவரு நிலையினையாய்ச்⋆
சீர் கெழு நான்மறை ஆனவனே!⋆
ஆண்டாய்! உனைக் காண்பதோர்⋆
அருள் எனக்கருளுதியேல்⋆
வேண்டேன் மனைவாழ்க்கையை⋆
விண்ணகர் மேயவனே (6)

உருக்குறு நறு நெய் கொண்டார் அழலில்⋆
இருக்குறும் அந்தணர் சந்தியின்வாய்⋆
பெருக்கமொடமரர்கள் அமர நல்கும்⋆
இருக்கினில் இன்னிசை ஆனவனே!⋆
ஆண்டாய்! உனைக் காண்பதோர்⋆
அருள் எனக்கருளுதியேல்⋆



www.prapatti.com

வேண்டேன் மனைவாழ்க்கையை⋆
    விண்ணகர் மேயவனே (7)

காதல் செய்திளையவர் கலவி தரும்⋆
    வேதனை வினையது வெருவுதலாம்⋆
ஆதலின் உனதடி அணுகுவன் நான்⋆
    போதலர் நெடுமுடிப் புண்ணியனே!⋆
ஆண்டாய்! உனைக் காண்பதோர்⋆
    அருள் எனக்கருளுதியேல்⋆
வேண்டேன் மனைவாழ்க்கையை⋆
    விண்ணகர் மேயவனே (8)

சாதலும் பிறத்தலும் என்றிவற்றைக்⋆
    காதல் செய்யாதுன் கழல் அடைந்தேன்⋆
ஓதல் செய் நான்மறை ஆகி⋆ உம்பர்
    ஆதல் செய் மூவுருவானவனே!⋆
ஆண்டாய்! உனைக் காண்பதோர்⋆
    அருள் எனக்கருளுதியேல்⋆
வேண்டேன் மனைவாழ்க்கையை⋆
    விண்ணகர் மேயவனே (9)

‡பூ மரு பொழில் அணி⋆ விண்ணகர்மேல்⋆
    காமரு சீர்க்⋆ கலிகன்றி சொன்ன⋆
பா மரு தமிழ் இவை⋆ பாட வல்லார்⋆
    வாமனன் அடியிணை⋆ மருவுவரே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com